# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 198/மா/2024**

**நாள்: 02.07.2025**

திரு. ச. அருண்குமார் --- முறையீட்டு மனுதாரர்
சென்னை

மண்டல அலுவலர், --- எதிர்மனுதாரர்
மண்டலம்–7
பெருநகர சென்னை மாநகராட்சி

சென்னை–600 053, அம்பத்தூர், காமராஜபுரம், கண்ணாத்தம்மன் கோயில் தெரு, எண் 8 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ச. அருண்குமார் என்பவரின் 08.10.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.10.2024 அன்று பெறப்பட்டு 198/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600 053, அம்பத்தூர், காமராஜபுரம், கண்ணாத்தம்மன் கோயில் தெரு, எண் 8 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ச. அருண்குமார் என்பவர் தனது 08.10.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். எங்கள் பகுதியில் அம்பத்தூர் சட்டமன்றத்தொகுதி, 85வது வட்டத்தில் அமைந்துள்ள கண்ணாத்தம்மன் கோயில் குளம் Chennai Mega City Development Mission என்ற திட்டத்தால் சுமார் 2 கோடி 28 இலட்சத்தில் கோயில் குளம் சீரமைப்பு பணிகள் 2019 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. குளம் பணிகள் தொடங்கி 60 சதவீதம் பணிகள் முடிவடைந்த நிலையில் எந்த ஒரு காரணமின்றி பணிகள் நிறுத்தப்பட்டன. இதனை அறிந்த நான் சென்னை மாநகராட்சி மண்டலம் 7 அதிகாரியிடம் கேட்டபொழுது கோயில் குளத்தை சிறிய பகுதி ஆக்கிரமிப்பு செய்த ஒருவர் 05.02.2021 அன்று இடைக்கால தடை உத்தரவு பெற்றுள்ளார். தீர்ப்பு வரும் வரை குளம் பணிகள் மேற்கொள்ளப்படாது என்றனர். நான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்த ஆணையை கேட்டிருந்தேன். தகவல் அளித்த சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் அதிகாரி இடைக்கால தடை உத்தரவு ஏதும் வழங்கப்படவில்லை என்றும் இடைக்கால உத்தரவு வேண்டி வழக்கு தொடந்ததாலே பணிகள் நிறுத்தப்படும் என்று பதிலளித்துள்ளார். ஆனால் ஆக்கிரமிப்பாளர் இடைக்கால தடை உத்தரவு வேண்டி தொடரப்பட்ட வழக்கை முறையாக தொடர முடியாமல் இருந்ததால் நீதிமன்றம் 05.07.2023 அன்று வழக்கை தள்ளுபடி செய்தது. அதன் பிறகும் சென்னை மாநகராட்சி மழை நீர் வடிகால் துறை குளம் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளாமல் காலதாமதம் ஏற்படுத்தி வந்துள்ளது. இதனை பலமுறை

பணிகள் மேற்கொள்ள மண்டலம் 7–ன் அதிகாரியிடம் மனுவாக கொடுத்துள்ளேன். என்னுடைய மனுவிற்கு எந்த ஒரு பதில்களும் அளிக்கப்படவில்லை. எனவே CM Cell என்ற இணையத்தில் புகார் தெரிவித்தேன். அதற்கு ஆக்கிரமிப்பு செய்த பகுதியை அளவீடு செய்து தரக்கோரி அம்பத்தூர் வட்டாட்சியர் அவர்களுக்கு இதுவரை 5 கடிதங்கள் பெருநகர மாநகராட்சியின் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே வட்டாட்சியர் அளவீடு செய்து அறிக்கையை பெற்றபின் பணிகள் தொடரப்படும் என்று மண்டலம் 7 நிர்வாக அலுவலர் பதிலளித்துள்ளார். அம்பத்தூர் வட்டாட்சியர் அவர்களை சந்தித்து குளம் பணிகள் தாங்கள் அளவீடு செய்து அறிக்கை அளித்தால் தான் பணிகள் மேற்கொள்வார்கள். குளத்தின் நிலத்தை அளவீடு செய்து தரும்படி கடந்த ஒரு வருடமாக நேரிலும், தொலைபேசியிலும், மனுவின் மூலமாகவும் மற்றும் மாவட்ட ஆட்சியரிடமும் புகார் மனு அளித்துள்ளோம். ஆனால் இன்றைய தேதி வரை குளத்தை அளவீடு செய்து அறிக்கை தருவதற்கு மறுக்கின்றனர். இதற்கிடையில் குளம் சீரமைப்பு பணிகள் 2019–ஆம் ஆண்டு தொடங்கி குளம் பணிகள் முழுவதும் முடிக்காமல் 2022ஆம் ஆண்டு குளம் சீரமைப்பு பணிகள் முழுவதும் முடித்ததாகவும், அதற்குண்டான நிதியை ஒப்பந்ததாரருக்கு அளித்துள்ளதாகவும், நம்ம சென்னை இணைய தளத்தில் வெளியிட்டுள்ளனர். இதனையும் பலமுறை புகார் தெரிவித்துள்ளேன். ஆனால் எனக்கு சரியான பதில்களும், அலட்சியமாகவும் பதில் அளித்து மனுவை நிராகின்றனர். மற்றும் இதுவரை குளம் சீரமைப்பு பணிகள் முடிவடைந்த நிலையில் ஒப்பந்ததாரர் அரசுக்கு அளித்துள்ள விலை நிலை புள்ளி பட்டியல்படி முறையான பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. பல ஊழல்கள் முறைகேடுகள் நடந்துள்ளன. எனவே கடந்த 3 வருடங்களாக குளம் பணிகள் மேற்கொள்ளாமல் இருப்பதால் பராமரிப்பு இன்றி குளத்தில் செடிகள், கொடிகள் அடர்ந்து காணப்பட்டு மிகவும் சேதம் அடைந்துள்ளது. மற்றும் மர்ம நபர்கள் குளத்தில் வந்து மது அருந்துதல், சூதாட்டம் ஆடுவது போன்ற குற்ற செயல்கள் நடைபெறுகின்றன. கடந்த 3 வருடங்களாக எந்த ஒரு காரணமின்றி குளம் சீரமைப்பு பணிகள் நிறுத்தியதற்கும், இது வரை குளம் சீரமைப்பு மேற்கொண்டுள்ள பணிகளில் ஊழல், முறைகேடுகள் நடந்துள்ளதையும், இதற்கு உடந்தையாக இருந்த அனைவரையும் விசாரித்து நடவடிக்கை எடுத்து போர்கால அடிப்படையில் வசதிகள் கொண்டு கண்ணாத்தம்மன் கோயில் குளம் சீரமைப்பு பணிகள் விரைவில் முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 29.10.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 7–ன் மண்டல அலுவலர் தனது கடிதம் ம.அ.7/ந.க.எண்.002033/2025, 02.04.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7, பகுதி 19, கோட்டம் 85–க்கு உட்பட்ட கண்ணாத்தம்மன் கோயில் குளத்தை தூர்வாரி சீரமைக்கும் பணி பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகையில் உள்ள மழைநீர் வடிகால்வாய் துறையினரால் 2020 ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. பணி நடைபெறும் காலத்தில் குளத்தின் சுற்றுச்சுவர் மற்றும் கரை அமைக்கும்போது ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு ஆக்கிரமிப்பை அகற்ற 16.10.2020 நாளிட்டு, under sec. 220 read with 222 of CCMC of 1919–ன் கீழ் தாக்கீது, ஆக்கிரமித்து செய்து வந்த 8 நபருக்கும் நோட்டீஸ் வழங்கப்பட்டது. நோட்டீஸ் வழங்கப்பட்டதை தொடர்ந்து திருமதி. ரங்கநாயகி, (க/பெ) கருணாநிதி அவர்களால் உயர் நீதி மன்றத்தில் வழக்கு (W.P.No.4674/2021) தொடுக்கப்பட்டு ஆணை வழங்கப்பட்டது.

Petition filed under Article 226 of the Constitution of India seeking a writ of mandamus, directing the second respondent to take appropriate action and pass orders expeditiously in accordance with law on the petitioner's representation dated 05.02.2021.

- Learned counsel for the corporation submits that notice has been issued to the encroachers and further steps are being undertaken.
- In view of the submission made that steps are being undertaken, no further orders are necessary. It is expected that the steps, that are being undertaken are taken to its logical end expeditiously.
- In view of the above, the writ petition is disposed of. There will be no order as to costs.

இதன் தொடர்ச்சியாக ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடங்களை அம்பத்தூர் வட்டாட்சியர் அவர்களுக்கு ஆக்கிரமிப்பை அளவீடு செய்து அறிக்கை சமர்ப்பிப்பது தொடர்பாக நாள் 17.08.2023, 30.08.2023, 15.09.2023, 06.03.2024, 25.04.2024 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக நாள் 13.03.2024 அன்று நில அளவையாளர் அம்பத்தூர் பெருநகர சென்னை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர், உதவிப்பொறியாளர், துப்புரவு மேற்பார்வையாளர் காவல்துறை (ம) பொதுமக்கள் முன்னிலையில் கள ஆய்வு மற்றும் அளவீடு செய்யப்பட்டது.

செயற்பொறியாளர் மூலம் அம்பத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு 02.02.2024, 02.07.2024, 24.10.2024 போன்ற நாட்களில் அளவீடு செய்த குளத்தின் FMB வரைபடம் மற்றும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட வீடுகளின் அளவீடு குறித்த விவரங்கள் அறிக்கையாக அனுப்புமாறு கடிதம் அனுப்பப்பட்டது.

இந்நாள் வரை எவ்விதமான அறிக்கைகளும் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து பெறப்படவில்லை. அதனால் மேலும், செயற்பொறியாளர் மூலம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு நினைவூட்டல் கடிதம் நாள் 18.03.2025 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

எனவே வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து அளவீடு செய்யப்பட்டு குளத்தின் FMB வரைபடம் மற்றும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட வீடுகளின் அளவீடு குறித்த விவரங்கள் அறிக்கையாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் ஆக்கிரமிப்பை அகற்ற அடுத்தக்கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

**4.** இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் **21.05.2025** அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு **13.05.2025** நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**5.** மனுதாரர் திரு. ச. அருண்குமார் என்பவர் **21.05.2025** அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

''நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். எங்கள் பகுதியில் அம்பத்தூர் சட்டமன்றத்தொகுதி, 85வது வட்டத்தில் அமைந்துள்ள கண்ணாத்தம்மன் கோயில் குளம் Chennai Mega City Development Mission என்ற திட்டத்தால் சுமார் 2 கோடி 28 இலட்சத்தில் கோயில் குளம் சீரமைப்பு பணிகள் 2019 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

குளம் பணிகள் தொடங்கி 60 சதவீதம் பணிகள் முடிவடைந்த நிலையில் எந்த ஒரு காரணமின்றி பணிகள் நிறுத்தப்பட்டன. இதனை அறிந்த நான் சென்னை மாநகராட்சி மண்டலம் 7 அதிகாரியிடம் கேட்டபொழுது கோயில் குளத்தை சிறிய பகுதி ஆக்கிரமிப்பு செய்த ஒருவர் 05.02.2021 அன்று இடைக்கால தடை உத்தரவு பெற்றுள்ளார். தீர்ப்பு வரும் வரை குளம் பணிகள் மேற்கொள்ளப்படாது என்றனர். சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் அதிகாரி இடைக்கால தடை உத்தரவு ஏதும் வழங்கப்படவில்லை என்றும் இடைக்கால உத்தரவு வேண்டி வழக்கு தொடர்ந்ததாலே பணிகள் நிறுத்தப்படும் என்று பதிலளித்துள்ளார். ஆனால் ஆக்கிரமிப்பாளர் இடைக்கால தடை உத்தரவு வேண்டி தொடரப்பட்ட வழக்கை முறையாக தொடர முடியாமல் இருந்ததால் நீதிமன்றம் 05.07.2023 அன்று வழக்கை தள்ளுபடி செய்தது. மேலும், CM Cellல் புகார் அளித்த பின்பு ஆக்கிரமிப்பு செய்த பகுதியை அளவீடு செய்து தரக்கோரி அம்பத்தூர் வட்டாட்சியர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் இன்றைய தேதி வரை குளத்தை அளவீடு செய்து அறிக்கை தருவதற்கு மறுக்கின்றனர். இதற்கிடையில் குளம் சீரமைப்பு பணிகள் 2019ல் ஆண்டு தொடங்கி குளம் சீரமைக்கும் பணிகள் முழுவதும் முடிக்காமல் 2022ஆம் ஆண்டு குளம் சீரமைப்பு பணிகள் முழுவதும் முடித்ததாகவும், அதற்குண்டான நிதியை ஒப்பந்ததாரருக்கு அளித்துள்ளதாகவும், சென்னை இணைய தளத்தில் வெளியிட்டுள்ளனர். இதுவரை குளம் சீரமைப்பு பணிகள் முடிவடைந்த நிலையில் ஒப்பந்ததாரர் அரசுக்கு அளித்துள்ள விலை நிர்ணய புள்ளி பட்டியல் முறையான பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. கடந்த 3 வருடங்களாக எந்த ஒரு காரணமின்றி குளம் சீரமைப்பு பணிகள் நிறுத்தியதற்கும், இது வரை குளம் சீரமைப்பு மேற்கொண்டுள்ள பணிகளில் ஊழல், முறைகேடுகள் நடந்துள்ளதையும், இதற்கு உடந்தையாக இருந்த அனைவரையும் விசாரித்து அவர்களின் மீது துறை நடவடிக்கை எடுக்கவும் கண்ணாத்தம்மன் கோயில் குளம் சீரமைப்பு பணிகள் விரைவில் முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும்படியும் மிகவும் தாழ்மையுடன் இம்முறை மன்ற நடுவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.''

6. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் செயற் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 21.05.2025 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

''பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7 பகுதி 19, கோட்டம் 85–க்கு உட்பட்ட கண்ணாத்தம்மன் கோயில் குளத்தை தூர்வாரி சீரமைக்கும் பணி பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகையில் உள்ள மழைநீர் வடிகால்வாய் துறையினரால் 2020 ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. பணி நடைபெறும் காலத்தில் குளத்தின் சுற்றுச்சுவர் மற்றும் கரை அமைக்கும் போது ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு ஆக்கிரமிப்பை அகற்ற 16.10.2020 நாளிட்டு ஆக்கிரமித்து செய்து வந்த 8 நபருக்கும் நோட்டீஸ் வழங்கப்பட்டது. நோட்டீஸ் வழங்கப்பட்டதை தொடர்ந்து திருமதி.ரங்கநாயகி, (க/பெ) கருணாநிதி அவர்களால் உயர் நீதி மன்றத்தில் வழக்கு எண்.W.P.No.4674/2021 தொடுக்கப்பட்டு 05.07.2023 அன்று ஆணை வழங்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடங்களை அம்பத்தூர் வட்டாட்சியர் அவர்களுக்கு ஆக்கிரமிப்பை அளவீடு செய்து அறிக்கை சமர்ப்பிப்பது தொடர்பாக 2023–2024வரை கடிதங்கள் அனுப்பப்பட்டன. இதன் தொடர்ச்சியாக நாள் 13.03.2024 அன்று நில அளவையாளர் அம்பத்தூர் பெருநகர சென்னை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர், உதவிப்பொறியாளர், துப்புரவு மேற்பார்வையாளர் காவல்துறை (ம) பொதுமக்கள் முன்னிலையில் கள ஆய்வு மற்றும் அளவீடு செய்யப்பட்டது.

செயற்பொறியாளர் மூலம் அம்பத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு அளவீடு செய்த குளத்தின் FMB வரைபடம் மற்றும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட வீடுகளின் அளவீடு குறித்த விவரங்கள் அறிக்கையாக அனுப்புமாறு கடிதம் அனுப்பப்பட்டது.

இந்நாள் வரை எவ்விதமான அறிக்கைகளும் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து பெறப்படவில்லை. எனவே வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து அளவீடு செய்யப்பட்டு குளத்தின் FMB வரைபடம் மற்றும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட வீடுகளின் அளவீடு குறித்த விவரங்கள் அறிக்கையாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் ஆக்கிரமிப்பை அகற்ற அடுத்தக்கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், மனுதாரர் தெரிவித்துள்ள மேற்கண்ட குளத்தினை தூர்வாரி, புனரமைப்பு பணிகளான குளத்தை சுற்றி மதில் சுவர் அமைப்பது, நடைபாதை அமைப்பது, மற்றும் மின் விளக்குகள் பொருத்துவது குறித்து ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட தொகை விவரங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி–தலைமையிடம் மழைநீர் வடிகால் துறையினரால் மேற்கொள்ளப்பட்டது என்பதால் அது குறித்த கோப்புகள் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல 7ன் அலுவலகத்தில் இல்லை என்பதை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.”

7. 21.05.2025 அன்று நடைபெற்ற விசாரணையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் செயற் பொறியாளர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு ஆஜராகி, மேற்கண்ட தூர் வாரும் பணிக்கு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட தொகை குறித்த புகாருக்கு, பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்து மழைநீர் வடிகால் துறையினரால் 2020 ஆண்டு மேற்கொள்ளப்பட்டது என்றும், அது குறித்த கோப்புகள் மண்டலம் 7–ன் மண்டல அலுவலகத்தில் இல்லை என்று தெரிவித்த காரணத்தினால், அப்புகார் குறித்து மனுதாரர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மழைநீர் வடிகால்வாய் துறை, கண்காணிப்பு பொறியாளர் (SWD) ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 02.06.2025 அன்று நடைபெறும் தொடர் விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.05.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

8. மனுதாரர் திரு. ச. அருண்குமார் மற்றும் மற்றொரு மனுதாரர் திரு. இரா. தீபக் விக்ராந்த் ஆகியோர் 02.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:

“எங்கள் பகுதியில் அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, 85வது வட்டத்தில் அமைந்துள்ள கண்ணாத்தம்மன் கோயில் குளம் Chennai Mega City Development Mission என்ற திட்டத்தால் சுமார் 2 கோடி 28 இலட்சத்தில் கோயில் குளம் சீரமைப்பு பணிகள் 2019 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. குளம் பணிகள் தொடங்கி இதுவரை 50 முதல் 55 சதவீத மட்டுமே பணிகள் முடிவடைந்த நிலையில் எந்த ஒரு காரணமின்றி பணிகள் நிறுத்தப்பட்டு உள்ளது. மேலும், ஒப்பந்தப்படி பணிகள் குளத்தை சுற்றி Grill, Footpath, பெரியவர்கள் உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள், சீசா போன்றவை அமைக்கப்படாமலும், ஒப்பந்தப்பணி முழுமையாக முடிக்கப்படாத நிலையில், ஒப்பந்தப்பணிக்கான முழு தொகை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது சந்தேகத்திற்கு இடமளிக்கிறது. இது வரை குளம் சீரமைப்பு மேற்கொண்டுள்ள பணிகளில் ஊழல், முறைகேடுகள் நடந்துள்ளதையும், இதற்கு உடந்தையாக இருந்த அனைவரையும் விசாரித்து அவர்களின் மீது துறை நடவடிக்கை எடுக்கவும் கண்ணாத்தம்மன் கோயில் குளம் சீரமைப்பு பணிகள் விரைவில் முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும்படியும் மிகவும் தாழ்மையுடன் இம்முறை மன்ற நடுவர் அவர்களை கேட்டுக் கொள்கிறோம்”

9. பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை, மழை நீர் வடிகால் துறையின் உதவி செயற்பொறியாளர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 02.06.2025 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7 பகுதி 19, கோட்டம் 85–க்கு உட்பட்ட கண்ணாத்தம்மன் கோயில் குளத்தை தூர்வாரி சீரமைக்கும் ஒப்பந்த பணி சுமார் ரூ 2,27,30,000/– பெருநகர சென்னை மாநகராட்சி, மழைநீா வடிகால்வாய் துறையினரால் 2020 ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தப்பணி de-slitting, Stone pitching, Foot path குளத்தை சுற்றி பாதுகாப்புக்காக Grill, Compound Wall அமைத்து வர்ணம் பூசுவது உள்அடக்கியதாகும். இவ்ஒப்பந்தப்பணி ஆரம்பித்தபோது குளத்தில் பெரிய கட்டடங்கள் கட்டி ஆக்கிரமித்து இருந்ததை அகற்றி ஒப்பந்தப்பணி நடைபெற்றது. Covid 2019 உச்ச கட்டத்தில் இருந்த காரணத்தினால் 30 மீட்டர் அளவில் உள்ள 3 ஆக்கிரமிப்பு கட்டிடங்கள் அகற்றப்படவில்லை. மற்ற பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டது. இந்தப் பணியில் Stainless Steel பதிலாக GI Pipe பொருத்தியதை கணக்கில் கொண்டு ஒப்பந்தப்பணிக்கான பட்டியல் தொகை ரூ.2,27,91,463/– வழங்கப்பட்டது என்று இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். "

10. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, மனுதாரர்களின் வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 7–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் செயற் பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்து மழைநீர் வடிகால் துறையின் உதவி செயற்பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர், அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, 85வது வட்டத்தில் அமைந்துள்ள கண்ணாத்தம்மன் கோயில் குளம் Chennai Mega City Development Mission என்ற திட்டத்தால் சுமார் 2 கோடி 28 இலட்சத்தில் கோயில் குளம் சீரமைப்பு பணிகள் 2019 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது எனவும், குளம் பணிகள் தொடங்கி இதுவரை 50 முதல் 55 சதவீத மட்டுமே பணிகள் முடிவடைந்த நிலையில் எந்த ஒரு காரணமின்றி பணிகள் நிறுத்தப்பட்டு உள்ளது எனவும், ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை எனவும், மேலும், ஒப்பந்தப்படி பணிகள் குளத்தை சுற்றி Grill, Footpath பெரியவர்கள் உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள் சீசா போன்றவை அமைக்கப்படாமலும், ஒப்பந்தப்பணி முழுமையாக முடிக்கப்படாத நிலையில் ஒப்பந்தப்பணிக்கான முழுத் தொகை சம்பந்தபட்ட ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது சந்தேகத்திற்கு இடமளிக்கிறது எனவும், இது வரை குளம் சீரமைப்பு மேற்கொண்டுள்ள பணிகளில் ஊழல், முறைகேடுகள் நடந்துள்ளதையும், இதற்கு உடந்தையாக இருந்த அனைவரையும் விசாரித்து அவர்களின் மீது துறை நடவடிக்கை எடுக்கவும் கண்ணாத்தம்மன் கோயில் குளம் சீரமைப்பு பணிகள் விரைவில் முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும்படி கோரியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7 பகுதி 19, கோட்டம் 85–க்கு உட்பட்ட கண்ணாத்தம்மன் கோயில் குளத்தை தூர்வாரி சீரமைக்கும் பணி சுமார் ரூ.2,27,30,000/– பெருநகர சென்னை மாநகராட்சி, மழைநீர் வடிகால்வாய் துறையினரால் 2020 ஆண்டு மேற்கொள்ளப்பட்டது எனவும், இந்த ஒப்பந்தப்பணி de-slitting,Stone pitching, Foot path குளத்தை சுற்றி பாதுகாப்புக்காக Grill, Compound Wall அமைத்து வர்ணம் பூசுவது உள்அடக்கியதாகும் என்றும், இவ்வொப்பந்தப் பணி ஆரம்பித்தபோது குளத்தில் ஆக்கிரமித்து பெரிய கட்டடங்கள் கட்டப்பட்டு இருந்ததை அகற்றி ஒப்பந்தப் பணி நடைபெற்றது எனவும், Covid 2019 உச்ச கட்டத்தில் இருந்த காரணத்தினால் 30 மீட்டர்

அளவில் உள்ள 3 ஆக்கிரமிப்பு கட்டிடங்கள் அகற்றப்படவில்லை எனவும், இந்த ஆக்கிரமிப்புகள் குறித்து அளவீடு செய்யக் கோரி வட்டாட்சியருக்கு கடிதம் எழுதியும், இதுவரை அளவீடு செய்யவில்லை எனவும், மற்ற பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு, இந்தப் பணியில் Stainless Steel பதிலாக GI Pipe பொருத்தியதை கணக்கில் கொண்டு ஒப்பந்தப்பணிக்கான பட்டியல் தொகை ரூ.2,27,91,463/– வழங்கப்பட்டது என்பது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் செயற் பொறியாளர், உதவி செயற் பொறியாளர், பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்து மழைநீர் வடிகால் துறையின் உதவி செயற்பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7, பகுதி 19, கோட்டம் 85–க்கு உட்பட்ட கண்ணாத்தம்மன் கோயில் குளத்தை தூர்வாரி சீரமைக்கும் பணி ஒப்பந்ததாரரால் முடிக்கப்பட்டு, ஒப்பந்தப் பணிக்கான பட்டியல் தொகை வழங்கப்பட்டதை, பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்து மழைநீர் வடிகால் துறையின் உதவி செயற் பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறியப்பட்டாலும், மனுதாரர் 02.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையின் வாக்குமூலத்தில் மேற்கண்ட குளத்தை தூர் வாரும் பணி 50 சதவீதம் முதல் 55 சதவீதம் வரை தான் முடிக்கப்பட்டு, முழு ஒப்பந்தப் பணிக்கான தொகை வழங்கப்பட்டு விட்டதாக தெரிவித்த நிலையில், இது குறித்து, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள விலை விகிதம் மற்றும் தொழில்நுட்ப விவரங்களின்படி, அம்பத்தூர் சட்டமன்ற தொகுதி 85வது வட்டத்தில் அமைந்துள்ள கண்ணாத்தம்மன் கோவில் குளம் சீரமைப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளனவா என்பதை ஆய்வு செய்ய சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் உள்ளடக்கிய, ஒரு தொழில்நுட்ப குழு ஒன்றினை அமைக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் அக்குழு மேற்கண்ட தனது ஆய்வு அறிக்கையினை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு சமர்ப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

மேலும் மேற்கண்ட பணிகள் முழுமையாக முடிவுறாத நிலையில், ஒப்பந்ததாரருக்கு முழுத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது என்ற மனுதாரரின் புகார் குறித்து, இப்பணிக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை அரசுக்கு நிதி இழப்பு ஏதுமின்றி முறையாக பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் மூலம் ஆய்வு மேற்கொண்டு அதன் அறிக்கையினை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு சமர்ப்பிக்குமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் மண்டல அலுவலர், அம்பத்தூர் வட்டாட்சியரின், அறிக்கை பெற்று, அளவீடு செய்து அதனடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் மண்டல அலுவலருக்கு உத்தரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 2–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. ச. அருண்குமார்,
எண் 8 கண்ணாத்தம்மன் கோயில் தெரு,
காமராஜபுரம், அம்பத்தூர்,
சென்னை–600 053.

2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் 7,
பெருநகர சென்னை மாநகராட்சி,
அம்பத்தூர்,
சென்னை–600 053.

4) இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககம்,
4வது மாடி, அன்பழகன் மாளிகை,
நந்தனம்,
சென்னை–600 035.

5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

6) தனி வட்டாட்சியர்,
நகர நில வரித் திட்டம், அம்பத்தூர்,
சென்னை–53 – உரிய நடவடிக்கைக்காக (திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் வழியாக)

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.